

# கல்வெட்டின் கதை

Office of the
Director of Archaeology
Madras

நடன. காசிநாதன்

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

# கல்வெட்டின் கதை

30 APR 1971
GOVT. OF MADRAS

2593 A

நடன. காசிநாதன்
கல்வெட்டாய்வாளர்,
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு

முதற் பதிப்பு. 1969.
தொ. பொ. ஆ. துறை. எண் 9

© தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

கல்வெட்டின் கதை

நடன. காசிநாதன்

விலை: 0-35.

தமிழ்நாடு அரசு
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப் பெற்றது.

Office of the
Director of Archaeology
Madras

2593 A

## ஆசிரியர் உரை

பல பெரியார்களது புத்தகங்களைப் படித்ததாலும் கல்வெட்டுத்துறையில் நல்ல அநுபவம் பெற்ற சான்றோர் களின் ஆலோசனைகளைக் கேட்டுக் கொண்டதாலும் "கல்வெட்டின் கதை" என்ற கட்டுரையைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் திங்கள் தோறும் வெளியிடப்பட்டு வந்த "தொல்பொருள்" என்ற செய்தி மடலில் தொடர்ச்சியாக எழுதும் வாய்ப்புக் கிட்டியது. இப்பொழுது இது ஒரு சிறு நூலாக வெளிவருகிறது. என்னை கல்வெட்டாய்வில் ஈடுபடுத்திய சென்னை பல்கலைக் கழக புராதன வரலாறு, தொல்பொருள் ஆய்வுத்துறைப் பேராசிரியர் அவர்கட்கும், என்னை இப்பணியில் ஊக்குவித்த தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

நடன. காசிநாதன்.

Office of the
Director of Archaeology
Madras

# கல்வெட்டின் கதை

நடன. காசிநாதன்
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை.

கல்லின் மீது பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்களுக்குக் கல்வெட்டு என்று பெயர். இத்தகைய கல்வெட்டுகள் தமிழகத்தில் ஏராளமாகக் காணப்படுகின்றன. கோயில்களிலும், மலைகளிலும், குகைகளிலும் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. கி. மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி, நிலைத்து நின்ற இப்பழக்கம் இப்பொழுது நமக்குப் பல கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகின்றன. அதற்கு முன்னரும் தமிழகத்தில் இம்முறை இருந்து வந்திருக்கிறது என்பதை சங்க இலக்கியங்கள் மூலமாக நாம் அறிய முடிகிறது.

மிகப் பழமையான இலக்கண நூல் எனக் கருதப்படும் தொல்காப்பியத்தில் போரில் இறந்துபோன மறவனுக்குக் கல்நட்டு, அக்கல்லில் அவனுடைய பெயரும் புகழும் எழுதி தெய்வ வழிபாடு செய்து வந்தனர் என்பதை,

> "காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்று
> இருமூன்று வகையிற் கல்லொடு புணர"

என்று குறித்துள்ளது. அகநானூற்றில் 'பெயரும் பீடும் எழுதி அதர்தொறும் பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' என்ற வரியும் புறநானூற்றுச் சில பாடல்களும்,

> "என்னை முன் நில்லன் மின் தெவ்விர் பலரென்னை
> முன்னின்று கல்நின்றவர்"

என்ற திருக்குறளும் நடுகல் நட்டு பெயரும் சிறப்பும் அக்கல்லின் மீது எழுதி வந்த வழக்கத்தை தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றன.

தமிழ் மூதாட்டி ஔவையாரும், 'கல்மேல் எழுத்துப்போற் காணுமே' என்று கூறியுள்ளதால் கல்மேல் எழுதும் வழக்கம் மிக நீண்ட நெடுங்காலமாகத் தமிழகத்தில் இருந்து வந்த ஒன்று என்பது உணரற்பாலது. கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனார் தாம் இயற்றிய திருவாரூர் மும்மணிக் கோவையில்,

> "பட்டோர் பெயரும் ஆற்றலுமெழுதி
> நட்ட கல்லும் மூதூர் நத்தமும்"

என்று கூறியிருத்தலால் கல்லில் எழுதும் வழக்கம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பது தேற்றம். ஆதாரப்பூர்வமாக கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்துதான் கல்வெட்டுகள் தமிழகத்தில் கிடைத்துள்ளன. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக்கொள்வோமாயின் கிறித்து பிறப்பதற்கு முன் நான்கு நூற்றாண்டிலிருந்து கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. மேலும் ஹரப்பன் நாகரிகத்தைச் சேர்ந்த பானை ஓடுகளிலும், முத்திரைகளிலும் உள்ள எழுத்துக்களைக் கருத்தில் கொள்வோமாயின் இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகிய எழுத்துக்களும் நமக்குக் கிடைத்துள்ளன என்று கொள்ளலாம்.

முன்னோர் எழுத்துகளை கல்லில் ஏன் பொறித்தார்கள் என்பதை நோக்குவோமாயின், ஔவையார் கூறியது போன்று நெடுநாட்கள் இம்மண்ணுலகில் அவை நிலைத்து நிற்க வேண்டுமென்பதற்காகத்தான் என்பது தெரியவருகிறது. கொடையளித்துள்ளது பற்றிப் பெரும்பாலாகவும், மற்ற வரலாறு, இலக்கியம், இசை ஆகிய செய்திகளைப் பற்றி சிலவாகவும் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. மண்ணாளும் பேரரசர்கள் முதல் சாதாரணக் குடிமகன் வரை கொடையளித்துள்ளனர். அளித்தவர்கள் தாங்கள் செய்த வள்ளண்மை சூரியன், சந்திரன் உள்ளளவும் என்றும் அழியாது பார்த்துக் கொள்ளும் பொருட்டு இக்காலத்தில் பதிவேட்டில் எழுதுவது போன்று கல்லில் பதித்து வைத்துள்ளனர். அதைக் கண்ணுறும் பொதுமக்கள் அங்குக் குறிக்கப் பட்டுள்ளவாறு கொடை பரிபாலிக்கப்பட்டு வருகிறதா என்று கண்காணிப்பதற்கு அது பயன்பட்டது.

அவ்வாறு அவர்கள் செய்த செயலால்தான் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர்கள் எழுதியுள்ளதை இன்றும் நாம் கண்டு இன்புற முடிகிறது.

[தொடரும்]

இந்தியாவில் கிடைத்துள்ள மொத்த கல்வெட்டுகளில் மூன்றில் இரண்டு பங்கு தமிழகத்திலிருந்து படியெடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இவையனைத்தும் புரிந்து கொள்ள முடியாது பல ஆண்டுகள் பயனற்று இருந்தன. பின்னர் ஒரு சில தமிழ்ப் புலவர்களால் இவை பயிலப் பெற்று, மிகக் குறைந்த மக்கள் குழாமில் இதன் பெருமை பேசப்பட்டு வந்தது. பிறநாட்டார் தொடர்பு நம் மக்களுக்கு அதிகமாக ஆக எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் காணப்பட்டது போன்று கல்வெட்டு படிப்பிலும் புது மாற்றம் ஏற்பட்டது.

முதன் முதலில் 1837ஆம் ஆண்டில், இந்திய கல்வெட்டுகளையெல்லாம் படியெடுத்து, ஒழுங்குபடுத்தி, அதை வரலாறு படைப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற கருத்தை ஜேம்ஸ் பிரின்ஸப் என்பார் வெளியிட்டார். அதற்குப் பிறகு, 'ஆசியாவின் ஆராய்ச்சிகள்' 'ஆசியக் குழுவின் பத்திரிகை' 'இந்தியாவின் பழமை' 'சென்னை இலக்கிய விஞ்ஞான பத்திரிகை' முதலிய பல இதழ்களில் பல கல்வெட்டுகளைப் பற்றியக் குறிப்பும் விளக்கமும் வெளிவர ஆரம்பித்தன. தனித் தமிழில் கல்வெட்டுகளைப் பற்றியக் குறிப்பும் கல்வெட்டின் நிழற்படமும் 'செந்தமிழ்' 'தமிழ்ப் பொழில்' போன்ற இலக்கிய இதழ்களிலும் வெளிவரலாயின.

1871-ல் இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் பொது இயக்குநராக நியமனமான திரு. அலெக்ஸாண்டர் கன்னிங்காம் என்பவர் மௌரியப்பேரரசன் அசோகனுடைய கல்வெட்டுகளை ஒன்றாகத் தொகுத்து வெளியிட்டார். அதன் பின்னர், இந்திய முதல் கல்வெட்டாராய்ச்சியாளராக நியமிக்கப் பெற்ற திரு ஃப்ளீட் என்பவர் குப்தர் காலத்திய கல்வெட்டுகளைத் தொகுத்தளித்திட்டார். சென்னைப் பிரிவுக்குக் கல்வெட்டாராய்ச்சியாளராகப் பணியேற்ற திரு ஹுல்ஷ் என்னும் பேரறிஞர் மிகவும் புகழ் வாய்ந்த தென்னிந்தியக் கல்வெட்டுகளின் முதல் பகுதியை 1890-ல் வெளிவரச் செய்தார். இதற்கும் ஓராண்டிற்கு முன்பு திரு. கன்னிங்காமை அடுத்து இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் பொது இயக்குநராகப் பொறுப்பேற்ற திரு. பர்ஜஸ் 'எபிகிராபியா இண்டிகா' என்ற இதழை ஆரம்பித்து கல்வெட்டுகளைத் தொடர்ந்து வெளியிட்டார். இவ்விதழ் நாளடைவில் வளரத் தொடங்கி, இந்தியாவின் எல்லா பகுதியிலுள்ள வரலாற்றுப் பேராசிரியர்களும், பிறதுறை பேரறிஞர்களும் இதில் கல்வெட்டுக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தனர்.

இச்சமயத்தில் சென்னை அரசாங்கம், 1887-ல் இருந்து கல்வெட்டுகள் படியெடுத்ததையும் அதில் என்ன கூறியுள்ளன என்பது பற்றியும் ஆண்டறிக்கைகள் மூலமாக வெளியிட ஆரம்பித்தது. சென்னை மாநிலத்தை மட்டும் உள்ளடக்கிய அவ்வறிக்கை 1921-ல் தென்னிந்தியா முழுவதையும் சேர்த்துக் கொண்டது. பின்னர் 1945-46 லிருந்து கல்வெட்டாராய்ச்சி மேலும் மேலும் விரிவடையவே இந்தியா பூராவையும் உள்ளடக்கிய 'இந்தியக் கல்வெட்டுகளின் ஆண்டறிக்கை' என்ற பெயரில் வெளிவரத் தொடங்கியுள்ளது.

வடமேற்கு இந்தியாவில் மிகுந்து காணப்படும் 'கரோஷ்டி' 'பிராமி' ஆகிய எழுத்துக்களில் உள்ள கல்வெட்டைப் பயின்று உலகத்திற்குக் கூறியவர்கள் பிரின்ஸப், லாஸ்ஸன், நோரிஸ், கன்னிங்காம் போன்றோர்களாவார். பிற பகுதிகளில் கிடைத்த கல்வெட்டுகளைத் தொகுத்துப் பயின்று வெளியிட்ட பெருமை பூலர், ஸெனர்ட், கீல்ஹார்ன், ஹுல்ஷ், ரைஸ், எல்லியட், ஃப்ளீட், பானர்ட் போன்ற வெளிநாட்டு அறிஞர்களையும் அவர்களின் வழி வந்த 'பகவன்லால் இந்திரஜித், மித்ரா, பண்டார்க்கர், வெங்கையா, கிருஷ்ணசாஸ்திரி போன்ற இந்திய நாட்டறிஞர்களையும் சாரும். தமிழ் நாட்டில் கிடைத்த "தாமிளி" கல்வெட்டுகளையும், வட்டெழுத்துக் கல்வெட்டுகளையும் வெளியுலகுக்குணர்த்திய பெருமை திரு. கே. வி. சுப்பிரமண்ய ஐயரையும், புகழ் பெற்ற வீரராஜேந்திரனின் கன்னியாகுமரிக் கல்வெட்டைப் படித்து தமிழ் மக்கள் அறியச் செய்த புகழ் திரு. கோபிநாத ராவ் அவர்களையும் சாரும். தமிழகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கிராம சுயாட்சி முறை நடைமுறையில் இருந்ததையும்; அவ்வாட்சியின் மையமாகிய ஊர்ச் சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்த முறையும், அதற்குரிய தகுதிகளும், தகுதியற்றோர் யாவர் என்பதும், விரிவாக உத்தர மேரூரில், முதல் பராந்தகச் சோழர் காலத்தியக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர்.

இன்றைய நிலையில் கல்வெட்டாய்வு ஓரளவு தக்க இடத்தைப் பெற்றுள்ளது. தமிழகத்தில் இக்கல்வெட்டாய்வுக்காக ஒரு தனிப்பிரிவை தமிழக அரசின் தொல்பொருளாய்வுத் துறையின் கீழ் ஏற்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளைத் திரு. சா. கணேசன் அவர்கள் வெளியிட்டார். அவரது வேண்டுகோளை ஏற்று அதற்கு ஆவன செய்ய தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அதன் படி, மாவட்டம் தோறும் கல்வெட்டுகளைப் படி

எடுத்து அச்சிட வேண்டிய முயற்சிகளைத் தொல் பொருள் ஆய்வுத்துறை மேற்கொண்டுள்ளது. அண்மையில் பண்டையத் தமிழ்க் கல்வெட்டுகளைத் திரு. ஐ. மகாதேவன் அவர்கள் படித்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கி உள்ளார். தருமபுரி அருகே, இருளம்பட்டி என்ற இடத்தில் ஒரு நடு கல்லில் காணப்படும் கல்வெட்டு தமிழக வரலாற்றுக்கு சிறப்புத் தருவதாகும். அதை இத்தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டு உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

## மொழி

தமிழ் நாட்டில் இதுகாறும் கிடைத்துள்ள மிகப் பழைய கல்வெட்டுகள் அனைத்தும் தமிழ் மொழியிலேயே உள்ளன. கி. மு. மூன்றும் நூற்றாண்டைச் சார்ந்தது என்று கூறப்படும் சித்தன்னவாசல் கல்வெட்டும் தமிழ் மொழியிலேயே இருக்கிறது. (எருமிநாட்டு குமுழூர் பிறந்த கவுடி இதென்கு சிறுபாவில் இளயர் செய்த அதிட்டானம்). சங்க காலச் சேரமன்னர் கல்வெட்டான புகளூர்க் கல்வெட்டும் தமிழில் காணப்படுகிறது. கி. மு. மூன்றும் நூற்றாண்டு தொடங்கி தொடர்ந்து இன்றுவரை கல்வெட்டுகள் தமிழில் காணப்படுகின்றன. இவற்றில் சில இலக்கண வரம்புக்கு உட்பட்டு, சிறந்த இலக்கிய நடையில் காணப்படுகின்றன.

தமிழ் நாட்டில் காணப்படும் பண்டையத் தமிழ்க் கல்வெட்டுகள் பெரும்பாலும் பேச்சு வழக்கில் உள்ள தமிழில் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி. எட்டாம் நூற்றாண்டு தொடங்கி இலக்கிய நடையில், கவி நயத்துடன் சில கல்வெட்டுகள் எழுதப்பெற்றுள்ளன. சோழப் பேரரசன் இராசராசன்தான், மெய்கீர்த்தி என்ற பகுதிக்கு முதன்முதலில் தனது கல்வெட்டுகளில் முதலிடம் அளித்துள்ளான். இம் மெய்கீர்த்திகள் தமிழ் மொழியில் நல்ல தேர்ச்சி பெற்ற பெரும் புலவர்களால் பாடப்பட்டிருக்க வேண்டுமெனத்தெரிகிறது. அதற்குப்பின்னர் வந்த சோழ அரசர்களும் அம்முறையைக் கைப்பற்றினர்.

சோழர்களுக்குப்பின் வந்த பாண்டியர்கள் தங்கள் கல்வெட்டுகள் சிலவற்றைப் பா வரம்புக்குட்பட்டு எழுதியுள்ளனர். பாண்டியர்களுடைய சில கல்வெட்டுகள் ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டுள்ளன. அக்காலத்தில் கல்வெட்டுகளுள் சில பெரும் புலவர்களால் இயற்றப்பட்டுப் பின்னர் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டுள்ளன. குப்தப் பேரரசன் சமுத்ரகுப்தனின் அலகாபாத் தூண் கல்வெட்டு ஹரிசேனன் என்ற கவிஞனாலும்; இரண்டாம் புலிகேசியின் அய்ஹொளே கல்வெட்டு இரவிகீர்த்தி என்ற புலவராலும் பாடப்பட்டுள்ளன. பாண்டியர்களின் வரலாறுபற்றி அறிந்து கொள்வதற்குப் பேருதவியாய் இருக்கிற வேள்விக்குடி செப்பேடு, சேனாதிபதி ஏனாதியாயின சாத்தன் சாத்தனால் பாடப்பெற்றது. (''இப்பிரஸஸ்தி பாடின சேனாதிபதி ஏனாதி ஆயின சாத்தஞ் சாத்தற்கு மூன்று கூற்றருமாய்த் தங்களோடொத்த நான்கு படாகாரங் கொடுத்தார்'').

தமிழ் நாட்டில் கி. பி. 14ஆம் நூற்றாண்டிலிருந்து அரசு வகித்த விஜய நகர மன்னர்கள், தெலுங்கு மொழியிலும், தமிழ் மொழியிலும், கன்னட மொழியிலும், ஸமஸ்கிருத மொழியிலும் கல்வெட்டுகளை எழுதியுள்ளார்கள். கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் தஞ்சைப் பகுதியை ஆண்ட மராட்டிய மன்னர்கள் மராட்டிய மொழியிலும் கல்வெட்டுகளைப் பொறித்துள்ளனர்.

செப்பேடுகளில் சில ஒரே மொழியிலும் பல இருமொழிகளிலும் வெளியிடப்பெற்றுள்ளன.

(கி. பி. மூன்றும் நூற்றாண்டு முதல் ஆறும் நூற்றாண்டு வரை ஆண்ட பல்லவ மன்னர்கள் வழங்கிய செப்பேடுகள் பிராகிருத மொழியில் மட்டுமே உள்ளன. பல்லவ மன்னன் முதலாம் பரமேச்சுரவர்மனின் உன்னகுரவயம் செப்பேடும், இரண்டாம் நரசிம்மவர்மனின் ரேயூர் செப்பேடும் ஸமஸ்கிருத மொழியில் காணப்படுகின்றன. கி. பி. ஆறும் நூற்றாண்டிலிருந்து ஸமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் செப்புப் பட்டயங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. (பள்ளன்கோயில் செப்பேடு, சிம்மவர்மனின் ஆறும் ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்றது.) அதற்குப்பின் இரண்டாம் நந்திவர்ம பல்லவ மல்லனைச் சார்ந்த காசாக்குடி, தண்டந்தோட்டம் செப்பேடுகளைக் கூறலாம்.) கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த கங்க மன்னனின் உதயேந்திரம் செப்பேடு அதற்கடுத்தாற்போல் வைக்கப்படவேண்டும். மேலே கூறப்பட்ட செப்பேடுகளும், சோழ மன்னன் சுந்தர சோழனின் அன்பில் செப்பேடும், புகழ்பெற்ற முதலாம் இராசராசனின் லேய்டன் பெரிய செப்பேடும், முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காட்டுச் செப்பேடும் ஸமஸ்கிருதத்தில் ஒரு பகுதியும், தமிழில் ஒரு பகுதியுமாக எழுதப்பட்டுள்ளன. ஆனால் முதலாம் இராசேந்திர சோழனின் திருக்களர் செப்பேடும் முதலாம் இராசாதிராசனின் திருக்களர் செப்பே

டும், முதலாம் குலோத்துங்க சோழனின் சிறிய லேய்டன் செப்பேடும், சிலவும் முழுவதும் தமிழிலேயே காணப்படுகின்றன. முற்கால பாண்டிய மன்னர்களின் செப்பேடுகள் ஸமஸ்கிருதத்தில் ஒரு பகுதியும் தமிழில் ஒரு பகுதியுமாகத் தோன்றுகின்றன. இதற்கு உதாரணமாக சின்னமனூர் செப்பேட்டைக் கூறலாம். இதில் தமிழ்ப் பகுதி வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனல் பிற்காலத்திய பாண்டியனுகிய வீரபாண்டியனின் செப்பேடு (கி. பி. 1470ல்) தமிழ் மொழியில் மட்டும் உள்ளது.

பாண்டியர்களுக்குப் பின்வந்த விஜயநகர நாயக்க மன்னர்கள் சில சமயம் தெலுங்கிலும் சில சமயம் கன்னடத்திலும்; சில சமயம் ஸமஸ்கிருதத்தில் ஒரு பகுதியும், தெலுங்கில் ஒரு பகுதியும்; சில சமயம் தமிழிலுமாகத் தங்கள் பட்டயங்களை வெளியிட்டுள்ளார்கள். இராமநாதபுரத்தைச் சேர்ந்த சேதுபதி மன்னர்களின் செப்பேடுகள் தமிழில் மட்டுமே உள்ளன.

## எழுத்து

இந்தியாவில் இதுவரையில் கிடைத்துள்ள மிகப் பழமையான எழுத்துக்கள் 'கரோஷ்டி' யும் பிராமியும் ஆகும். கரோஷ்டி எழுத்து மிகக் குறைந்த அளவிலே காண, பிராமி எழுத்துக்கள் மிகுந்த அளவில் தென்படுகின்றன. கரோஷ்டி என்ருல் கழுதையின் காது என்று பொருள். கழுதையின் காது போல அவ்வெழுத்துக்கள் காணப்படுவதால் அப்பெயர் பெற்றது என்று ஒரு சாரார் கூறுவர். 'பிராமி' என்ருல் பிரமனிடமிருந்து பிறந்தது என்று பொருள் கூறுகின்றனர். கரோஷ்டி எழுத்துக்கள் வலப்புறமிருந்து இடப்புறமாக எழுதப்பட்டிருக்கின்றன. பிராமி எழுத்துக்கள் மற்ற இந்திய எழுத்துக்களைப் போன்று இடப்புறமிருந்து வலப்புறமாக எழுதப்பட்டுள்ளன. மொஹஞ்சோதரா, ஹரப்பாவில் கிடைத்துள்ள முத்திரைகள் மேல் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் இன்று ஏறக்குறைய நாலாயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முற்பட்டவை. இவ்வெழுத்துக்கள் இன்னும் சரிவர படிக்க முடியாதபடி உள்ளன. ஒரு சாரார் இவ்வெழுத்திலிருந்துதான் பிராமி தோன்றியிருக்க வேண்டுமென்று கூறுகிருர்கள். பிராமியிலிருந்துதான் இந்தியாவின் மற்ற எழுத்துக்கள் எல்லாம் கிளைத்திருக்கவேண்டும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழ்நாட்டில் கிடைத்துள்ள எழுத்துக்களில் காலத்தால் முந்தியுள்ள எழுத்து பிராமியேயாகும். இங்கு கிடைக்கும் பிராமி எழுத்துக்களுக்கும் வட இந்தியாவில் கிடைத்துள்ள பிராமி எழுத்துக்களுக்கும் வரி வடிவத்தில் சிறு வேற்றுமை காணப்படுகிறது. ஆகவே தமிழ் நாட்டில் கிடைக்கும் எழுத்துக்களைத் 'தாமிழி' என்று கூறுகின்றனர். இதற்குச் சான்ருக, கி. மு. முதலிரண்டாம் நூற்ருண்டுகளைச் சார்ந்த சமண நூலில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் அட்டவணை காட்டப்படுகிறது. பல வகையான எழுத்துக்களைக் கூறும் அந்நூல் 'தாமிழி' என்ற ஒரு எழுத்தையும் கூறுகிறது. அத்தாமிழி தமிழ் நாட்டில் காணப் பெறும் பிராமி போன்ற எழுத்துக்களைத்தான் கோடிட்டுக் காட்டுகிறது என்று கூறுகின்றனர்.

அத்தகைய தாமிழி எழுத்துக்கள் தமிழ் நாட்டில் கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலிருந்து காணப்படுகிறது. இவ்வெழுத்துக்கள் பெரும்பாலும் மலைகளில் உள்ள குகைகளிலும் சமணர் படுக்கைகளிலும் காணப்படுகின்றன. எனவே, இந்தியாவின் வடப்பகுதியிலிருந்து தென்னகம் வந்த சமணத் துறவிகள்தான் இத்தகைய எழுத்துக்களைப் பொறித்துள்ளனர் என்று கூறுகின்றனர் ஒரு சாரார். பாண்டிச்சேரியின் அண்மையிலுள்ள அரிக்கமேட்டிலும், திருச்சியின் ஒரு பகுதியாகிய உறையூரிலும் அகழ்வாராய்ச்சி செய்து பார்த்த போது பானை ஓடுகளின் மேல் இவ்வாருன எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளதைக் கண்டுபிடித்துள்ளனர். அது போன்றே, தமிழகத் தொல்பொருள் ஆய்வுத் துறை கொற்கையில் நடத்திய அகழ்வாய்விலும் ஏராளமான 'தாமிழி' எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகள் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன. ஆகையால் சமண முனிவர்கள் மட்டும் இவ்வெழுத்துக்களை உபயோகிக்கவில்லை, தமிழகத்தின் சாதாரண குடிமகனும் வழக்கத்தில் கொண்டிருந்தான் என்பது இதனுல் பெறப்படுகிறது. அத்தோடு இவ்வெழுத்தில் காணப்படும் கல்வெட்டுகளின் மொழி தமிழாகவே உள்ளது. எனவே இப்பொழுதுள்ள தமிழின் முந்தைய வரி வடிவமாகத்தான் இவ்வெழுத்துக்கள் இருந்திருக்க வேண்டும் என்று துணியலாம்.

கி. மு. மூன்ரும் நூற்ருண்டு முதல் (சித்தன்னவாசல் கல்வெட்டு) கி. பி. மூன்ரும் நூற்ருண்டு வரை கல்வெட்டுகளில் தாமிழி எழுத்துக்கள் காணப்படுகின்றன. அதன் பின்னர் தாமிழி எழுத்திலிருந்து கி. பி. மூன்ரும் நூற்ருண்டின் இறுதிக் காலத்தில்

தமிழும் வட்டெழுத்தும் ஒருசேர வளரத்தொடங்கின. கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கு இருளம்பட்டி நடுகல் கல்வெட்டுகளையும், கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிற்குத் திருநாதற்குன்று கல்வெட்டையும் சான்றாகக் காட்டுகின்றனர் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள். கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் கிரந்த எழுத்துக்களில் ஒரு பகுதியும் தமிழ் எழுத்துக்களில் ஒரு பகுதியுமாக இருக்கும் செப்பேடுகள் காணப்படுகின்றன. பல்லவ மன்னன் சிம்மவர்மனின் செப்பேட்டை இதற்கு உதாரணமாகக் கூறலாம். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வட்டெழுத்தில் உள்ள செப்பேடு காணமுடிகிறது. உதாரணமாக கேரளமன்னன் பாஸ்கர இரவிவர்மனின் திருநெல்வேலிச் செப்பேட்டைக் கூறலாம். அதற்குப் பின்னர் கி. பி. பத்தாம் நூற்றாண்டு தொடங்கி பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டு வரை ஏராளமான, சோழர்களின் புகழ்பெற்றத் தமிழ்க் கல்வெட்டுகளும், வேள்விக்குடிச் செப்பேட்டில் காணப்படுவது போன்ற நல்ல முறையில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் மல்கிக் காட்சியளிக்கின்றன.

செப்பேடு என்று எடுத்துக் கொண்டால் கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி. பி. ஆறாம் நூற்றாண்டு வரையில் வெளியிட்ட பல்லவர் காலச் செப்பேடுகள் அனைத்தும் கிரந்த எழுத்தில் உள்ளன. ஏனெனில் செப்பேடுகள் பிராகிருத மொழியிலும் சம்ஸ்கிருத மொழியிலுமே உள்ளதால் அம்மொழியை எழுதுவதற்கு அவர்கள் கிரந்த எழுத்துக்களை உபயோகித்து வந்திருக்கின்றனர். கி. பி. ஆறாம் நூற்றாண்டு முதல் காணப்படும் பல்லவச் செப்பேடுகளில் தமிழ் எழுத்தில் ஒருபகுதியும் கிரந்த எழுத்தில் ஒரு பகுதியும் காணமுடிகிறது. அதே நிலையில்தான் இராசராசன் பெரியலேடன் செப்பேடும், இராசேந்திரனின் திருவாலங்காடு செப்பேடும் காணப்படுகின்றன. ஆனால் பின்வந்த சோழர்கள் தனித்தமிழிலேயே செப்பேடுகள் எழுதி வெளியிட்டுள்ளனர். பாண்டியர்கள் வட்டெழுத்திலும் தமிழ் எழுத்திலும் செப்பேடுகள் வெளியிட்டுள்ளனர். பின்வந்த விஜயநகர மன்னர்களும் நாயக்க மன்னர்களும் தெலுங்கிலும், கன்னடத்திலும், தமிழிலும் எழுதி வெளியிட்டுள்ளனர். ஆனால் இராமநாதபுரம் சேதுபதிகள் மட்டும் தமிழெழுத்திலேயேத் தங்கள் செப்பேட்டைத் தயாரித்துள்ளனர்.

## கல்வெட்டும் வரலாறும்.

இந்தியாவின் வரலாற்றைத் தொகுத்துக் கூறுவதற்கு எவ்வளவோ வழிகள் இருந்தாலும்கூட கல்வெட்டுகளைப் போன்று உதவுவன வேறொன்றுமில்லை. இந்தியாவின் முறையான வரலாறு முகம்மதியப் படையெடுப்புக்குப் பின்னர் தான் கிடைக்கிறது. அதற்கு முற்பட்ட காலங்ககளின் வரலாற்றை அக்கால இலக்கியங்கள் மூலமாகவும், வெளிநாட்டார் அக்கால இடைவெளிகளில் இந்நாட்டிற்கு வந்து குறித்துப்போன குறிப்புகள் மூலமாகவும், நாணயங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள் மூலமாகவுந்தான் அறிய முடிகிறது. இங்கு கூறப்பட்டவைகளுள் மிக்க வரலாற்றுச் செய்திகளைத் தருவது கல்வெட்டுகளேயாம்.

அதைப்போன்றே தமிழக வரலாற்றிற்கும் கல்வெட்டுகள் பேருதவி புரிந்துள்ளன. கல்வெட்டுகளின் அருமை தெரியாததற்கு முன்னர் தமிழக வரலாற்றை அறிய பெரிதும் தமிழிலக்கியங்களே உதவின. இலக்கியத்தைக் கொண்டு ஒரு நிகழ்ச்சி எந்த நூற்றாண்டில் நடந்தது என்பதைக் கணக்கிடுவது மிகவும் கடினம். ஏனெனில் தமிழிலக்கியங்களின் காலமே இன்னும் சரிவர ஒருமித்த கருத்துடன் கணிக்கவில்லை. பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பெற்ற 'நந்திக்கலம்பகமும்', சோழப் பேரரசன் முதலாம் குலோத்துங்கனின் கலிங்கப் படையெடுப்பைப் பற்றிக் கூறும் 'கலிங்கத்துப்பரணியும்', ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றுள்ள 'குலோத்துங்கச்சோழன் உலா', 'விக்கிரம சோழன் உலா', 'இராசராசன் உலா' ஆகியவையும் தமிழ் மன்னர்களின் வரலாற்றை அறிவதற்கு ஓரளவுக்குத் துணைபுரிந்தாலும், அவைகள் முழு அளவுக்கு ஒத்துழைக்கவில்லை. சேக்கிழாரால் இயற்றப்பட்டுள்ள 'பெரியபுராணம்' மற்ற இலக்கியங்களைவிட வரலாற்றுக்குப் பெருந்துணை புரிகிறது. அதேபோல இப்பொழுதும் சேரமன்னர்களின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு சங்க இலக்கியங்களுள் ஒன்றான பதிற்றுப்பத்துத்தான் காலக்கண்ணாடியாக இருந்து வருகிறது.

மேலே கூறப்பட்ட இலக்கியங்கள் தமிழக வரலாற்றிற்குச் சிறிதளவு உதவியுள்ளது என்றாலும், தமிழக வரலாற்றைத் தொடர்ச்சியாக எழுதுவதற்குக் கல்வெட்டுகள்தான் உதவிக்கு வருகின்றன. சங்க இலக்கியங்களின் காலத்தை கி.பி. முதல் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரை எனக்கூறியுள்ளார்கள் வரலாற்று ஆசிரியர்

களும் தமிழறிஞர்களும். அக்காலத்தில் தமிழகத்தை சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆண்டுள்ளனர். அவர்களை அடுத்து தமிழகத்தை, ஆண்டவர்கள் பல்லவர்கள் என்று கல்வெட்டுகள் மூலமாகத் தெரிய வருகிறது. (பல்லவர்களின் காலம் கி.பி. மூன்றும் நூற்றுண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டுவரை உள்ள அறுநூறு ஆண்டு காலமாகும்.) அப்பர் தேவாரத்தின் மூலமாக கி.பி. ஆறு, ஏழாம் நூற்றுண்டில் ஆண்ட முதலாம் மகேந்திரவர்மனைத்தான் நாம் அறியமுடிகிறது. ஆனுல் செப்பேடுகள், மகேந்திரவர்மனுக்கு முன்னர் ஆண்ட பல்லவமன்னர்களையும் அவர்களின் வீரச் செயல்களையும் தொகுத்துக் கூறுகின்றன. மகேந்திரவர்மனுக்கு முன்னர் ஆண்ட சிம்மவிஷ்ணு தனது செப்புப்பட்டயத்தில் சோழனின் கடல் போன்ற படையை அடக்கி வெற்றி கொண்டான் என்று கூறுவதிலிருந்து அம்மன்னன் காலத்திலும் சோழ நாட்டில் சோழ மன்னர்கள் ஆண்டு வந்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது. அதுபோன்றே சங்ககாலப் பாண்டியர்களுக்குப் பின் பாண்டிய நாட்டை யார் ஆண்டார்கள் என்பதை வேள்விக்குடிச் செப்புப்பட்டயம்தான் தெரிவிக்கிறது. அதில் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் 'களப்பிரர்' என்பவர்களை வென்று மீண்டும் பாண்டியர் ஆட்சியை நிலைநிறுத்தினுன் என்பதோடு அவனுக்குப் பின்னர் கி.பி. எட்டாம் நூற்றுண்டு வரை ஆண்ட பாண்டிய மன்னர்களின் பட்டியலையும் தருகிறது. இதிலிருந்து சங்ககாலப் பாண்டியர்களுக்குப்பின் தமிழகம் 'களப்பிரர்' என்ற இனத்தவரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது என்றும் அவர்களை, குறுநில மன்னராகவோ அல்லது அரச பதவி இல்லாமலோ இருந்த பாண்டிய மன்னன் ஒருவன் வென்று பாண்டியராட்சியைத் திரும்பவும் நிலைநிறுத்தினுன் என்றும் தெரியவருகிறது.

இதுபோன்று முக்கிய வகைகளில் தமிழக வரலாறு படைப்பதற்குக் காரணமாயிருந்த கல்வெட்டுகள், வரலாற்றிற்கு எவ்வெவ்வகையில் உதவியுள்ளன என்பதைக் கீழே காண்போம். முதன் முதலில் புகளூர்க் கல்வெட்டைப் பற்றி ஆராய்வோம். இக்கல்வெட்டு கிடைப்பதற்கு முன்னர் சேரர் வரலாற்றைப் பற்றி அறிய இலக்கியங்கள் தான் திறவுகோலாக இருந்தன. இப்பொழுது இக்கல்வெட்டு 'சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை', 'பெருங்கடுங்கோ', அவன் மகன் 'இளங்கடுங்கோ' என்று சேர மன்னர்களின் பெயர்களைக் கூறுவதால் இலக்கியங்களில் கூறுவன உண்மை என்பதற்கும் சேரமன்னர்களின் வரலாற்றைக் கூறும் இதுபோன்ற பல கல்வெட்டுகள் இன்னும் இருக்கக்கூடும் என்பதற்கும் சான்ருகும்.

சில பாண்டிய மன்னர்கள் கி.பி. ஐந்தாம் நூற்றுண்டிலும் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கும் அவர்கள் குகைக்கோயில்கள் சிலவற்றை குடைவதில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதற்கும் பிள்ளையார்பட்டி குகைக் கோயிலில் காணப்படும் கல்வெட்டைக் கொண்டு அறியமுடிகிறது.

பல்லவ மன்னனுகிய இரண்டாம் நரசிம்மவர்மனின் வயலூர்க் கல்வெட்டு அம்மன்னனின் முன்னேர் ஐம்பத்தி நான்கு பேர்களைப் பற்றிக் கூறுவது வரலாற்றிற்குப் பேருதவி புரிந்து வருகிறது.

ஒரு மன்னனது முன்னேர்களின் நீண்ட பட்டியலைத்தரும் கல்வெட்டு இந்தியாவிலேயே வயலூர்க் கல்வெட்டு ஒன்றுதான் என்பது நோக்கத் தக்கது.

இலக்கியங்களின் மூலமாக நாம் அறிந்திருக்கும் முதலாம் இராசேந்திரனின் கங்கை படையெடுப்புப் பற்றியும், முதற்குலோத்துங்க சோழனின் கலிங்கப் போர் பற்றியும் தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள எண்ணுயிரம் என்ற ஊரில் உள்ள கல்வெட்டும், ஆந்திர மாநிலத்திலுள்ள திராக்ஷராமம் கல்வெட்டும் முறையே விளக்குகின்றன.

அடுத்து செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூரில் கிடைத்துள்ள முதற்பராந்தக சோழனின் (907--955) கல்வெட்டு கி.பி. பத்தாம் நூற்றுண்டில் தமிழகத்தில் ஊராட்சி முறை எவ்வாறு அமையப்பெற்றிருந்தது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அதில் தேர்தலில் நிற்பவர்களுக்கு இன்னின்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்றும் அவர்கள் இன்னின்ன குற்றங்கள் செய்திருக்கக் கூடாதென்றும், அவ்வாறு குற்றம் செய்து தண்டிக்கப்பட்டவர்கள், அவர்களின் உறவினர்கள் ஆகியோர் தேர்தலில் நிற்கக்கூடாது என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்வாறு ஊராட்சி பற்றிக் கூறப்படும் கல்வெட்டுகள் பல தமிழகத்தில் காணமுடிகிறது. அவற்றுள் மானூரில் கிடைக்கும் பாண்டிய மன்னன் மாறஞ்சடையனுடைய கல்வெட்டு குறிப்பிடத்தக்கதாகும்.

ஊராட்சி முறைபற்றி மட்டுமல்லாது பல சமுதாயச் சீர்திருத்தங்கள் பற்றியும் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஒவ்வொரு ஊரிலும் கிராமச்சபை ஒன்று இருந்தது என்றும், அது நீர் வாரியம், கழனி வாரியம், தோட்ட வாரியம், பொன் வாரியம், நியாய வாரியம் என பல வாரியங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வாரியமும் அதற்கென ஒதுக்கப்பட்ட காரியங்களைச் செவ்வனே செய்து வந்தன என்றும் தெரிகிறது.

தென்னுற்காடு மாவட்டம் எண்ணுயிரத்தில் காணப்படும் கல்வெட்டு, அங்கே முதலாம் இரா

சேந்திரனல் ஒரு கல்லூரி அமைக்கப்பட்டிருந்த தென்பதையும் அக்கல்லூரியில் பலதுறைகளிலும் தேர்ச்சிபெற்ற பேராசிரியர்கள் இருந்தனர் என்றும், ஏராளமான மாணவர்கள் கல்வி பயின்றனர் என்றும், அம்மாணவர்களுக்கு இலவசமாக உணவு அளிக்கப்பட்டன வென்றும், ஆசிரியர்களுக்கு ஊதியம் தரப்பட்டன என்றும் நன்கு விளக்குகின்றது.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் என்னும் ஊரில் காணப்படும் கல்வெட்டின் மூலம் வீரராசேந்திரன் காலத்தில் அவ்வூரில் ஒரு ஆதுர சாலே (மருத்துவமனே) இருந்தது என்பதும் அது இலவசமாக நோயாளிகளுக்கு மருத்துவப் பணி ஆற்றி உதவியது என்பதும் தெரியவருகிறது. இதுபோல் இன்னென்றையும் இங்கு அவசியம் குறிப்பிடவேண்டும். அதாவது கல்வெட்டுகள், இன்ன ஆண்டில், இன்ன மாதத்தில், இன்ன கிழமையில், இன்ன நட்சத்திரத்தில், இன்ன நாட்டைச் சேர்ந்த, இன்னர், இன்னர் காலத்தில், இன்னருக்குக் கொடையாக அளித்தான் அல்லது இன்னது நிகழ்ந்தது என்று குறிப்பிடுவதேயாகும். அம்மாதிரி கூறும் கல்வெட்டுகள், நிகழ்ச்சியை சக வருடத்திலோ, அல்லது கலியுக ஆண்டிலோ தெரிவிக்கின்றன. சில கல்வெட்டுகள் இரண்டு ஆண்டையும் ஒருசேரக் குறிப்பிடும். சில, ஏதாவது ஒரு வருட முறையைக் குறிப்பிட்டுவிட்டு அத்தோடு ஆளும் அரசனின் ஆட்சியாண்டையும் குறிப்பிடும். அவ்வாறு குறிப்பிடுவதால் அம்மன்னன் எந்த ஆண்டில் அரசுகட்டில் ஏறினனென்றும் எவ்வளவு காலம் அரசு ஆண்டான் என்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காணமுடிகிறது.

அடுத்து, சோழ மன்னன் முதலாம் இராசராசன் தன்னுடைய கல்வெட்டுகளில் தொடங்கிய மெய்க்கீர்த்தி என்ற பகுதி வரலாற்றிற்கு மிக மிக இன்றியமையாததாகும். ஒவ்வொரு ஆண்டும் தான் பெற்ற வெற்றியைத் தன் மெய்க்கீர்த்திகளில் சேர்த்துக் கல்வெட்டுகளில் பொறித்துள்ளான். அவன் தன்னுடைய எத்தனையாவது ஆட்சி ஆண்டில் அந்த வெற்றியை அடைந்தான் என்று கணக்கிடுவதற்கு அவை மெத்தவும் உதவிபுரிகின்றன. இதுபோன்று பல வகைகளிலும் கல்வெட்டுகள் வரலாற்றிற்குப் பெருந்துணையாக உதவி வருகின்றன.

## கல்வெட்டுகளில் தமிழிலக்கியங்கள்.

தமிழக வரலாற்றை அறிந்து கொள்வதற்குத் தமிழிலக்கியங்கள் பெரிதும் பயன்படுகின்றன என்பதை ஒப்புக்கொள்ளும் சான்ருேர்கள் அனைவரும் அவ்விலக்கியங்களின் கால நிர்ணயத்தில் பெரிதும் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கிருர்கள். ஒரு சிலர் தமிழின் மீதுள்ள அளப்பரிய பற்றின் காரணமாகத் தமிழிலக்கியங்கள் மிகவும் தொன்மையானவை என்று பிறர்க்குணர்த்துவதில் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். பிறிதொருசாரார், பிறமொழி இலக்கியங்களில் இல்லாதது தமிழில் என்ன இருக்கிறது; தமிழிலக்கியங்கள் அனைத்தும் பிறமொழி இலக்கியங்களின் நேர் மொழிபெயர்ப்புக்களே யன்றி வேறென்றுமல்ல, எனவே அவை மிகவும் பிற்காலத்தைச் சேர்ந்தவைகளே என்றும் வாதாடுகிருர்கள். இருவேறு கருத்துக்களைத் தங்கள் இதயங்களிலே ஏந்தி நிற்கும் இருசாராரையும், ஓரளவு உண்மையை உணரவைக்கத் தமிழகத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் பெரும் நன்மை புரிகின்றன.

முதலில் பத்துப் பாட்டில் ஒன்ருன 'மலைபடுகடாம்' என்ற நூலைப் பற்றி இவண் காண்போம். திருவண்ணமலையிலுள்ள கோப்பெருஞ்சிங்கன் காலத்திய கல்வெட்டொன்று அவ்வரசனது முன்னோர் புகழ் பற்றிக் குறிப்பிடும்போது,

> 'நல் இசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்
> வெல்புகழ் அனைத்தும் மேம்பட'

என்ற பாடல் வரிகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டின்கண் கூறப்படும் 'கடாம்' என்னும் சொல் மலைபடுகடாத்தையும், நன்னன் என்னும் பெயர் மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவனையும் குறிப்பதாகும். எனவே இதுவரை இலக்கியத் துணை கொண்டு ஆராய்ந்த நமக்கு, கல்வெட்டுத் துணையும் கிடைத்திருப்பது பெருமைக்குரியதாகும். இக்கல்வெட்டின் இன்னெரு சிறப்பு என்னவெனில் மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவன் நன்னனது வெற்பில் கோப்பெருஞ்சிங்கன் தனது கொடியைப் பொறித்தான் என்று கூறுவதாகும். கோப்பெருஞ்சிங்கன் காலம் கி.பி. பதின் மூன்ரும் நூற்ருண்டு என வரலாற்ருசிரியர்களால் உறுதி செய்யப்பட்டுவிட்டதால் அவனது நாட்களில் நன்னன் சேய் நன்னனின் பெயர் தாங்கி நிற்கும் ஒரு மலை புகழோடு விளங்கியதை அறியும்போது சில நூற்ருண்டுகளுக்கு முன்பு நன்னன் வாழ்ந்திருக்கவேண்டுமென்பதும் அவனைப் பற்றிப் பாடிய மலைபடுகடாம் அக்காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பதும் வெளிப்படை. அடுத்து, உருத்திரங் கண்ணனரால் பாடப் பெற்ற பட்டினப்பாலைக் குறித்தும் அது அரங்கேறிய மண்டபம் பற்றியும் இங்கு காணலாம்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுடைய (கி.பி. 1216—1238), 'வெறியர் தளவத் தொடை மாறன்' எனத் தொடங்கும் திருவெள்ளறைக் கல்வெட்டில்,

> 'பறியாத தூண் இல்லே; கண்ணன்செய்பட்டினப்
> பாலேக்கு, அன்று
> நெறியால் வரும் தூண் பதினறுமே
> அங்கு நின்றனவே!

என வரும் இறுதிப் பகுதியில் பட்டினப்பாலே அரங்கேறிய மண்டபம் ஒன்று சோழ நாட்டில் இருந்தமை தெரியவருகிறது. இப்பட்டினப்பாலே பற்றியும், அதன் ஆசிரியர் உருத்திரங் கண்ணனுருக்கு அரசன் அளித்த கொடை பற்றியும் இலக்கியங்கள் சிலவும் எடுத்தியம்புகின்றன.

> 'தத்துநீர் வரால் குமிவென்றதும்
> தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
> பத்தொரு நூறு ஆயிரம் பெறப்
> பண்டு பட்டினப்பாலே கொண்டதும்'

எனக் கலிங்கத்துப் பரணி கூறுகிறது.

> 'பாடியதோர் வஞ்சிநெடும்பாட்டால் பதினறு
> கோடி பொன் கொண்டது நின்கொற்றமே'

எனத் தமிழ் விடுதூதிலும் பாராட்டப் பெற்றிருக்கிறது.

உருத்திரங் கண்ணனுருக்குச் சோழ மன்னன் திருமாவளவன் பாட்டின் பரிசாகப் பொன் கொடுத்துதவியது போன்று பிற்காலத்து மன்னர்களும் புலவர்கட்குப் பாட்டின் பரிசாக நிலம் தந்த செய்தி திருமயம் வட்டத்திலுள்ள மடத்துக் கோயில் என்னும் ஊரின்கண் காணப்படும் இரண்டாம் குலோத்துங்க சோழனின் (கி. பி. 1146) கல்வெட்டின் வாயிலாக நமக்குத் தெரியவருகிறது. அக்கல்வெட்டில் மருதத்தூர் மருத்தூருடையான் குன்றன் திருச்சிற்றம்பலமுடையான் என்னும் புலவர் பையூர் திருச்சிற்றம்பலமுடையானேப் பற்றிக் கவி பாடியதற்காகப் பரிசாகப் பெற்ற தன் காணியை விற்ற செய்தியை நாம் அறிகிருேம். அது போன்றே தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பாதிரிப்புலியூரில் காணப்படும் முதற்குலோத்துங்க சோழனின் (கி.பி. 1111) கல்வெட்டொன்று கமலாலயற்குக் கன்னிவன புராணம் பாடினதற்கும் நாடகம் யாத்ததற்கும் பரிசிலாகப் பாலேயூரினில் 'இருபூவிளேயும் பாரில் ஒருமா நன்நிலம்' புலவர் பெற்ருர் என்பதைத் தெரிவிக்கிறது. அதே ஊரில் காணப்படும் முதற்குலோத்துங்க சோழனது (கி. பி. 1119) மற்றெரு கல்வெட்டு திருப்பாதிரிப் புலியூரிலுள்ள மாமுனிவரைப் பற்றி அஷ்டாதஸ புராணமும், கன்னிவன புராணமும் பாடியதற்காக இரண்டுமா நிலம் பரிசாக வழங்கப்பட்டது என்பதை உணர்த்துகின்றது.

பட்டினப்பாலே பாடிய உருத்திரங்கண்ணனரின் சமகாலத்தவர் என்று கருதப்படும் கபிலரைப் பற்றியும் அவரைப் புரந்து தன் அவைக்களப் புலவராக ஆக்கிக்கொண்ட பாரி பற்றியும், பாரி இறந்தபோது வள்ளல் பாரியின் மகளே அழைத்துச் சென்று மலேயமானுக்கு மணமுடித்து வைத்த பின்னர் பாரியின் நினைவாகவே கபிலர் வடக்கிருந்து இறந்துவிட்டதையும் கவிதை நடையில் அழகாக கீழூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது. இக்கல்வெட்டு முதலாம் இராசராசனின் ஆட்சிக் காலமாகிய இருபத்தேழாமாண்டைச் (கி. பி. 1012) சார்ந்ததாகும். அக்கல்வெட்டு,

> "முத்தமிழ் நான்மைத்
> தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன்
> மூரிவண் டடக்கைப் பாரி தனடைக்கலப்
> பெண்ணே மலேயற் குதவி பெண்ணே
> யலேபுவ லழுவத் தந்தரிக்ஷஞ் செல
> மினல் புகும் விசும்பின் வீடுபே றெண்ணிக்
> கனல் புகுங் கபிலக்கல்லது புனல்வளர்"

என்று குறிக்கிறது.

சங்க இலக்கியங்களேயும் அவற்றின் பாட்டுடைத் தலேவர்களேயும், அவைகளேப் பாடிய புலவர்களேப் பற்றியும் உள்ளவாறறிய துணே புரிந்த கல்வெட்டுகள் சைவ, வைணவப் பெரியார்கள் இயற்றிய தேவாரம், திருவெம்பாவைப் பற்றியும் சில செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை தேவாரப் பதிப்புகளிலே காணமுடியாத, வடவாயின்மேல் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப் பாடலின் வரிகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவடவாயில் என்னும் ஊரில் உள்ள கல்வெட்டில் காணப்படுகின்றன. திருஞானசம்பந்தர் பாடிய திருவடவாய்தான் இப்பொழுது வழங்கப் பெறும் திருவடவாயிலாக இருக்கவேண்டும். எனவே இப்பொழுதிருக்கின்ற திருவடவாயிலும் திருஞானசம்பந்தர் காலத்தில் ஒருபெரு சைவத்தலமாக இருந்திருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லே. மேலும் தேவாரம், திருப்பதியம், திருவெம்பாவை ஆகிய பாடல்கள் ஒவ்வொரு ஆலயத்திலும் ஒவ்வொரு நாளும் பாடப்பட்டன என்பதும் அவைகள் பனே ஓலேயிலும் செப்பேட்டிலும் எழுதப்பட்டு 'திருக்கைக்கொட்டி' என்னும் மண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது என்பதும் கல்வெட்டுகளால் உணரமுடிகிறது.

கி. பி. 1070—1120 வரையில் ஆட்சி புரிந்த முதற்குலோத்துங்க சோழனது படைத்தலேவர்களுள் ஒருவனுகிய மணவிற் கூத்தன் காலிங்க ராயன் என்பான் சைவ சமயக்குரவர் மூவரு[ம்] பாடிய தேவாரத் திருப்பதிகங்களேச் செப்பே[டு]களில் எழுதித் தில்லேயம்பதியிலுள்ள கோயில்

வைத்தனன் என்று திருச்சிராப்பள்ளியில் காணப்படும் கல்வெட்டொன்று உணர்த்துகிறது. அக்கல்வெட்டு இனிய வெண்பாவால் அமைந்துள்ளது.

> "முத்திறத்தார் ஈசன் முற்றிறத்தைப் பாடியவர்
> ஒத்தமைத்த செப்பேட்டின் உள்ளெழுதி-இத்தலத்து
> எல்லைக்கிரிவாய் இசைந்தெழுதினன் கூத்தன்
> தில்லைச் சிற்றம்பலத்தே சென்று."

என்பதாம். எனவே திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய மூவரும் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்களை நம்பியாண்டார் நம்பிகள் தேடிக் கொணர்ந்து, திருமுறைகள் தொகுத்த பின்னர், அப்பதிகங்கள் அழிந்து போகாதவாறு, தில்லை நகரில் முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் செப்பேடுகளில் எழுதிவைக்கப்பட்டன என்பது இங்கு அறியத்தக்கதாகும்.

இலக்கியங்களைப் பற்றிக் கூறிய கல்வெட்டுகள் ஓரிரு இலக்கண நூல்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. நீடூரில் காணப்படும் முதற்குலோத்துங்க சோழனின் (கி. பி. 1070-1120) கல்வெட்டு தமிழிலக்கண நூல் யாப்பெருங்கலக்காரிகை பற்றித் தெரிவிக்கிறது. நூல் பற்றிக் குறிப்பிடுவதோடல்லாமல், இந்நூல் யாருடைய வேண்டுகோளினால் இயற்றப்பட்டது என்பதையும் தெரிவிப்பது இந்நூலின் காலக்கணிப்புக்குப் பெரிதும் பயன்படுகிறது. கண்டன் மாதவன் என்பான் நீடூரின்கண் அழகு பொருந்திய ஒரு விமானத்தை அமைத்தான் என்பதைக் கூற முற்படுகின்ற இக்கல்வெட்டு கண்டன் மாதவன், காரிகை என்னும் நூலை இயற்றுமாறு அமுதசாகர முனியைத் தூண்டிய ஒருவனின் மருமகன் என்று செப்புகிறது. இதிலிருந்து காரிகையை எழுதும்படி தூண்டிய ஒருவன் முதற் குலோத்துங்க சோழன் காலத்திய கண்டன் மாதவனின் மாமனார் என்பதும், அம்மாமனார் காலத்தில் எழுதிய காரிகை ஏறக்குறைய அக்கண்டன் மாதவனின் காலத்தையோ அல்லது சிறிது காலம் முந்தியதாகவோ இருத்தல் வேண்டுமென்பதும் உண்மை. அவ்வாறெனில் காரிகையின் காலம் முதற்குலோத்துங்க சோழன் காலமாகிய கி. பி. பன்னிரண்டாம் நூற்றூண்டாக இருத்தல் வேண்டுமென்பது துணிபு. காரிகையின் ஆசிரியர் குணசாகரரைப் பற்றித் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த கழுகுமலையில் காணப்படும் மற்றொரு கல்வெட்டும் கூறுகிறது. இக்கல்வெட்டு பாண்டிய மன்னன் மூன்றும் இராசசிம்மனுக்கு அடுத்ததாக அரசு கட்டிலேறின மாறஞ்சடையனுடையது என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிபு. அவ்வாறெனில் கி. பி. பன்னிரண்டாம் நூற்றூண்டைச் சார்ந்த இக்கல்வெட்டும் நாம் மேலே கொண்ட முடிவிற்கு உறுதுணையாகிறது.

அடுத்து, நன்னூலின் முகவுரையில், அந்நூலை இயற்றிய பவணந்தி என்பார் அமராபரணன் சீயகங்கன் என்னும் மன்னனின் அவையில் இருந்தார் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. மூன்றும் குலோத்துங்க சோழனின் காலத்திய கல்வெட்டுகள் அமராபரணன் சீயகங்கனைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. செங்கை மாவட்ட காஞ்சிபுரக் கல்வெட்டொன்றும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சித்தூர் மாவட்டத்திலுள்ள காளகஸ்தி, அகத்திய கண்ட ஆகிய ஊர்களில் காணப்படும் கல்வெட்டுகளும் சீயகங்கனைப் பற்றித் தெரிவிக்கின்றன. இக்கல்வெட்டுகளின் துணைகொண்டு தமிழிலக்கண நூல் நன்னூலின் காலத்தை பன்னிரண்டாம் நூற்றூண்டின் இறுதியாகவோ அல்லது பதின் மூன்றும் நூற்றூண்டின் தொடக்கமாகவோ கொள்ளலாம்.

இலக்கியத்தையும் இலக்கணத்தையும் ஆராய்ந்த நாம் இதிகாசத்தையும் புராணத்தையும் காண வேண்டுமல்லவா? அவைகளையும் சற்று ஆராய்வோம். வடாற்காடு மாவட்டத்திலுள்ள திருவாலங்காடு என்னும் ஊரில் மூன்றும் குலோத்துங்க சோழனது கல்வெட்டொன்று பாரதத்தை அழகு தமிழில் பெயர்ந்த அறநிலைவாசகன் என்பான் அளித்த கொடையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு மூன்றும் குலோத்துங்க சோழனின் (கி.பி. 1178—1215) காலத்தியதாக உள்ளதால் பாரதத்தைத் தமிழ்ப் படுத்தியதும் அதேகாலமாக இருக்கவேண்டுமென்பது தெளிவாகும். பெருந்தேவனர் இயற்றிய பாரதம் கி. பி. ஒன்பதாம் நூற்றூண்டைச் சேர்ந்ததால் காலத்தால் முந்தியதாகிவிட்டது. வில்லிபுத்தூரார் இயற்றிய பாரதம் பதினைந்தாம் நூற்றூண்டானதால் காலத்தால் பின் தங்கியதாகிவிட்டது. எனவே இப்பொழுது வழக்கில் உள்ள பாரதம் மூன்றும் குலோத்துங்கன் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பாரதம் இல்லையென்றே கொள்ளலாம்.

பெரியபுராணத்தில் கூறப்படும் ஞானசம்பந்தரைப் பற்றிய ஒரு நிகழ்ச்சிக்கு தென்னுற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவடத்துறை கல்வெட்டொன்று பக்க பலமாக நின்று பறைசாற்றுகிறது. இக்கல்வெட்டு விசயநகர அரசர் இரண்டாம் தேவராய மகாராயர் (கி.பி. 1443) காலத்தியதாகும். இதில் திருவறத்துறையிலுள்ள திருமுத்தின் சிவிகை கொடுத்தருளிய நாயனர் எனக் குறிக்கப்பட்டுள்ளது. பெரிய புராணத்திலுள்ள ஒரு கதை, ஞானசம்பந்தரவர்கள் நடைப்பயணம் மேற்கொண்டு, தொடர்ந்து செல்ல முடியாது துன்புறும் நேரத்தில் திருவடத்துறையின்கண் இறைவன் முத்துச்சிவிகை அருளி தனது அடி

யாரைக் காப்பாற்றினான் எனத் தெரிவிக்கிறது. எனவே இக்கல்வெட்டில் காணப்படும் திருவறத் துறைதான் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள திருவறத்துறை என்பது பொருந்தும். அக்கதையின் காரணமாகத்தான் அவ்வூரிலுள்ள இறைவனுக்கு திருமுத்தின் சிவிகை கொடுத்தருளிய நாயனார் என்று பெயர் வழங்கப்பட்டு வந்தது என்பதும் உணரற்பாலது.

அக்காலத் தமிழ் மக்கள் தமிழ்ப் புலவர்களை எவ்வாறு மதித்து வந்தார்கள் என்பதற்கு ஒரு நற்சான்று நமக்கு மற்றொரு கல்வெட்டு மூலம் கிடைத்துள்ளது. பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த திருச்செந்தூர் கல்வெட்டொன்று திருச்செந்திலுள்ள சுப்பிரமணியப் பிள்ளையார் கோயிலில் நற்கீரதேவ நாயனார் ஆலயம் ஒன்று இருந்ததாகக் கூறுகிறது. இதிலிருந்து அக்காலத்து மக்கள் நக்கீரர் போன்ற தமிழ்ப் புலவர்களை இறைவர்களாகக் கொண்டு ஆலயம் எழுப்பி வழிபாடு நடத்தி வந்தார்கள் என்பது புலனாகிறது. இது போன்று பல செய்திகளைத் தெரிந்துகொள்வதற்கு பெரிதும் உதவும் கல்வெட்டுகளை அறிந்து கொள்வதால் நம் பண்டைய வாழ்க்கை முறையை அறிந்தவராகிறோம்.

---

30 APR 1971
... MADRAS, MADRAS

2593 A